**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – விடுதிகள் – புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியின் பழுதடைந்த பழைய கட்டடத்தை இடித்துவிட்டு ரூ.1,27,15,377/- மதிப்பீட்டில் புதிய விடுதிக் கட்டடம் கட்டுதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2) துறை**

அரசாணை **(நிலை)** எண்:47

நாள் : 28.05.2019
விகாரி வருடம்
வைகாசித் திங்கள் 14–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (ப) எண். 52, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–2) துறை, நாள். 27.03.2018.
2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க. எண். த3/24581/ 2017, நாள். 27.08.2018.

---

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் இயங்கி வந்த ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவியர் விடுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய கட்டடத்தை இடித்து அகற்றும் பணியை செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை புதுக்கோட்டை அவர்களிடமிருந்து பெறப்பட்ட உறுதித்தன்மை சான்றின் அடிப்படையில் மேற்கொள்ளவும், அவ்விடுதிக்கு புதிய விடுதிக் கட்டடம் கட்டப்படும் வரை, அவ்விடுதியினை தற்காலிகமாக வாடகைக் கட்டடத்தில் இயக்கிடவும், ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவியர் விடுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய கட்டடத்தை இடித்துவிட்டு 50 மாணவியர்கள் தங்கக் கூடிய அளவில் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியிருந்தார்.

3. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின்னர், புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவியர் விடுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய கட்டடத்தை இடித்துவிட்டு, ரூ.1,27,15,377/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தேழு இலட்சத்து பதினைந்து ஆயிரத்து முன்னூற்று எழுபத்து ஏழு மட்டும்) மதிப்பீட்டில் 50 மாணவியர்கள் தங்கக் கூடிய அளவில் அவ்விடத்தில் புதிய விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி அளித்தும், நிதி ஒப்பளிப்பு வழங்கியும், அரசு ஆணையிடுகிறது.

த.பி.பா.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"4225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – JA – ஆதிதிராவிடர் மாணவரில்லங்கள் கட்டுதல் – 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்
(IFHRMS DPC 4225 01 277 JA 41601)
(Old DPC 4225 01 277 JA 1603)"

5. மேலே குறிப்பிட்டுள்ள பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998/விதிகள் 2000–ஐ பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கட்டுமானப் பணி தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோ நிறுவனத்தின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது:-

"K வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443–00– உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத்தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத்தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் "
(த.தொ.கு. 8443 00 800 BY 000G) (Receipt)
(த.தொ.கு 8443 00 800 BY 0004) (Outgo)".

7. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதி 2019–20 ஆம் ஆண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும், 2019–20 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்ட மன்றப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2019–20 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (ஆதி(ம)பந/வ.செ.பொ–1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படியும், அதன்படி தேவையான நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு உரிய கருத்துருவை 2019–2020–ஆம்

த.பி.பா.

நிதியாண்டில் அரசுக்கு அனுப்பிவைக்குமாறும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இது தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், கட்டுமானப்பணியை விரைவாக செயல்படுத்துதல் மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 11493/ஆதி(ம)பந/2019, நாள். 02.05.2019-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.88 (எண்பத்து எட்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்:**

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், புதுக்கோட்டை
மாவட்ட கரூவூல அலுவலர், புதுக்கோட்டை

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –600 009.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின்
முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
நிதி(ஆதி(ம)பந/வ.செ.பொ–1)த் துறை, சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ ஆதிந.5 ) துறை, சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்